முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.03.03.2026

O.S No. 90/2022

பி.வா.சா.1-சகாய முத்தரசி

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் வழக்கு சொத்தை நேற்றும் திங்கள்கிழமையும் பார்த்தேன். 23.2.2026 ம் 2.3.2026 ம் தேதியும் நேரில் சென்று பார்த்தேன். அதற்கு முன்பாக வழக்கு சொத்தின் இடம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு தெரியயும் குறிப்பிட்டு அந்த சொத்தை 2 தேதியில் நான் பார்த்தேன். பாதையில் சாய்தளம் ஏற்படுத்தி ஆக்கரிமிப்பு செய்ததாக எனக்கு எத்தனை முறை புகார் வந்தது என்றால் புகாரே வரவில்லை. அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியரிடம் இருந்து எனக்கு வழக்கு பாதையை பார்த்து அறிக்கை தாக்கல் செய்ய குறிப்பாணை வந்ததா என்றால் இல்லை. 25.9.2017 ல் எனக்கு குறிப்பாணை அனுப்பி அதன் நகலை வாதிக்கு அனுப்பியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. சப்பாத்து ஆக்கிரமிப்புகளை அகற்றி எல்லைகளை நிர்ணயம் செய்ய எனக்கு அந்த குறிப்பாணை வந்தது என்றால் தெரியாது. நான் 2.9.2024 ல் பணிக்கு சேர்ந்ததால் அதற்கு முன்பான விவரங்கள் எனக்கு தெரியாது.

ந,க.எண்.62/2017/அ, தேதி 9.3.2017 என்ற கோப்பை பார்த்தால் மேற்படி குறிப்பாணை விவரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் அதனை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. மாவட்ட ஆட்சியர் செயல் அலுவலருக்கு பிறப்பித்த உத்தரவின் பேரில் செயல் அலுவலர் எடுத்த நடவடிக்கை சம்பந்தமாக ஆட்சியருக்கு 9.3.2017 ம் தேதி சமர்ப்பித்த அறிக்கை என்றாலும் அதன் நகலை வாதிக்கு அனுப்பபட்டுள்ளது என்றாலும் சரி. அங்கீகரிக்கபடாத மனை என்பதால் ஆக்கிரமிப்புகளை அகற்ற இயலவில்லை என்று செயல்அலுவலர் 9.3.2017 ல் அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றால் சரி. அந்த கோப்புகள் என்

அலுவலகத்தில் உள்ளதென்றால் சரி. அதனை இந்த வழக்கில் சமர்ப்பிக்கலாம் என்றால் சரி. அதனை பார்த்தால் மட்டுமே முழுமையாக என்னால் சாட்சியம் அளிக்க முடியும் என்றால் சரி.

இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் கோப்புகளை இந்த வழக்கில் தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரி. வழக்கு பாதையை நான் அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கு பாதை உள்ள தெருவில் சப்பாத்து எத்தனை அடியில் உள்ளதென்றால் 3 வீடுகளிலும் ஒரே அளவு சப்பாத்து உள்ளது. அது மண்மேடையாக அமைத்துள்ளார்கள் கான்கிரிட் போன்ற எந்த அமைப்பும் இல்லை. வாதி வீட்டு காம்பவுண்ட்டுக்குள் நான் சென்றேனா என்றால் இல்லை. வாதி வீடு எப்போது கட்டினார் என்ற விவரம் தெரியாது. 3,4,5 பிரதிகள் வீடு எப்போது கட்டினார் என்ற விவரம் தெரியாது. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் விவரங்கள் நான் பணியில் சேர்வதற்கு முன்பாகவே தாக்கல் செய்யப்பட்டது எதிர்வழக்குரையின் விவரங்கள் நான் படித்து பார்த்தேன் ஆனால் விவரங்கள் தெரியாது.

CPC பிரிவு 80 ன் கீழான நோட்டிஸ் வந்ததா என்றாலும் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றாலும் தெரியாது. 15.7.2004 ம் தேதி வழக்கு பாதையை கவர்னருக்கு ஆவணமாக எழுதி கொடுத்துள்ளார்கள். பாதையில் சப்பாத்து ஏற்படுத்தியதற்கு நடவடிக்கை எடுக்க வாதி 2004 க்கு பிறகு மனு கொடுத்தார் என்றால் சரி. வீடு கட்டியபின்பு பாதை அளவை உயர்த்தினால் மழைநீர் மற்றும் கழிவுநீர் தண்ணீர் ஓடையில் செல்ல முடியாது என்றால் சரி. ரோடு புதிதாக போடும்போது ரோட்டை சட்டத்தின் படி உயரப்படுத்த கூடாது என்றால் சரி. 3 முதல் 5 பிரதிகள் சப்பாத்து ஏற்படுத்தி பாதையை உயரப்படுத்தியதால் வாதி வீட்டில் இருந்து கழிவுநீர் மழைநீர் செல்லாமல் வாதி வீட்டிற்குள் தேக்கமடைகிறது

என்றால் சரியல்ல. எந்த நீருமே தேங்கவில்லை. சட்டகடமையை மீறி விட்டு அதனை மறைக்கவும் 3 முதல் 5 பிரதிகளின் ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாதையில் இருந்து உயர்த்தபட்ட சப்பாத்துக்களை சரிசெய்து கொடுக்க எங்களுக்கு கடமை உண்டு என்றால் சரியல்ல. வாதியிடம் இருந்து வீட்டுவரி வசூல் செய்யப்பட்டது என்றால் சரி.

வீட்டுவரியுடன் கழிவுநீர்மேலாண்மை மற்றும் குப்பை வரி வசூல் செய்கிறோம் என்றால் சரியல்ல குப்பை வரி மட்டுமே வசூல் செய்கிறோம். எதிர்வழக்குரைக்கும் நான் தாக்கல் செய்த ஆவணங்களுக்கும் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகோரிய பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. 3 முதல் 5 பிரதிவாதிகள் தவறு செய்து இருப்பதால் தோன்றா தரப்பினராக இருக்கிறார்கள் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.)